# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),
தொலைபேசி: 044-29515590


## ஆணை நாள் - **05.08.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA-19739-C-2022

திரு. கோ.விஸ்வபூபதி — மனுதாரர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஆவடி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம் - 600072.

பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 01.08.2022 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 27.02.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.09.2022 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 08.11.2022 |

****

## ஆணை

இவ்வழக்கு இன்று (05.08.2025) இவ்வாணையத்தால் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. கோ.விஸ்வபூபதி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி கவிதா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஆவடி வட்டாட்சியர் அலுவலகம், அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விளிஞ்சியம்பாக்கம் கிராம புல எண்.19/52 விஸ்தீர்ணம் 00.206 ச.மீ உள்ள குடியிருப்பு மனையின் கிரையம் பெற உத்தேசித்துள்ளேன். மேற்படி புல எண் 19/52 க்கு உண்டான பட்டா நகல் கணிம வழியில் (Net) வரவில்லை தாய் பத்திரம் (copy) பிறகு உயில் எழுதி கொடுத்துள்ள (copy) இத்துடன் இணைத்துள்ளேன் பட்டா நகல் கணிம வழியில் வரவில்லை உண்மை தன்மையை விரபம் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (05.08.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.3943/2024/அ4 நாள் 27.02.2025 மற்றும் 30.07.2025 தேதிகளிட்டு ஏற்கெனவே மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையாக வழங்கப்படவில்லை என்றும், அத்தகவலை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்க பொதுத்தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகின்றன :-

- ***மனுதாரரின் 01.08.2022 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கோரியுள்ள தகவல்கள் குறித்து முழுமையான தகவல்களை மனுதாரருக்கு வழங்கும் பொருட்டு, மனுதாரரை நேரில் அழைத்து அவர் கோரிய தகவல் குறித்த தகவலை முழுமையாக வழங்குமாறும் பொதுத்தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும்,'தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றை இவ்வாணையத்தில் 04.09.2025 அன்று சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.***

- ***மேற்படி, இவ்வாணையத்தின் உத்திரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்களை வழங்கத் தவறும் பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் பிரிவு 19(8)(b) ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.***

**ஒம்/- (ரா.பிரியகுமார்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA-19739-C-2022</u>**
**பெறுநர்**
பொது அதிகார அமைப்பு:-
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
ஆவடி வட்டாட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம் - 600072.

**<u>வழக்கு எண்.SA-19739-C-2022</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு. கோ.விஸ்வபூபதி
2,நம்மாழ்வார் தெரு,
காந்தி நகர்,
ஆவடி,
சென்னை - 600054

Copy to: File.
VPS / PA-11.08.2025

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005